அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை/ All Rights reserved

# வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
# Provincial Department of Education - NWP

32 T I

## முதலாந் தவணைப் பரீட்சை – தரம் 12 – 2018
## First Term Test - Grade 12- 2018

சுட்டெண் : ........................

வணிகக்கல்வி I
Business Studies I

காலம் : 2 மணி

**அறிவுருத்தல்கள்**
- **சகல வினாக்களுக்கும் இவ்வினாப்பத்திரத்திலேயே விடையளித்தல் வேண்டும்**
- **வினா இலக்கம் 1 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கு சரியான விடையினைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
- **வினா இலக்கம் 31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்கு சுருக்கமான விடையினைப் புள்ளி கோட்டின் மீது எழுதுக.**

01. வணிகக்கல்விப்பாடத்தில் அடிப்படை எண்ணக்கருக்கள் சில விளக்கப்படுகின்ற முறை கீழே தரப்பட்டுள்ளது.
   1. இரு பிரிவினரிடையே அல்லது பல்வேறு பிரிவினரிடையே பெறுமதிகளுடன் கூடியதொன்று விற்பனை செய்யப்படல்.
   2. தான் விரும்பும் உற்பத்திப் பொருளொன்றை இன்னொருவருக்கு வழங்கி பெறுமதியுடன் கூடிய பொருளொன்றை அவரிடமிருந்து பெற்றுக் கொள்ளல்.
   3. தேவை மற்றும் விருப்பங்களைத் திருப்தி செய்வதற்கு உற்பத்தியாளருக்குக் காணப்படுகின்ற ஆற்றல் தொடர்பில் நுகர்வேரினால் மேற்கொள்ளப்படுகின்ற கணிப்பீடு.
   4. தனது எதிர்பார்ப்பு நிறைவேற்றப்பட்டது தொடர்பில் வாடிக்கையாளரினுள் ஏற்படுகின்ற மனப்பாங்கு
   5. கொள்வனவாகும் விற்பனையாளரும் இலத்திரனியல் ஊடகத்தினூடாக தொடர்புபடுகின்ற எந்தவொரு சந்தர்ப்பமும்.

   மேலே தரப்பட்ட கருத்துக்களுக்கு பொருத்தமான வகையில் கூறப்படுகின்ற எண்ணக்கருக்களை ஒழுங்கு முறையாகக் காட்டும் விடை எது?
   1) பண்டமாற்று, வியாபாரம், பெறுமதி, திருப்தி, விரிந்த சந்தை
   2) பண்டமாற்று, வியாபாரம், பெறுமதி, திருப்தி, சந்தை
   3) பண்டமாற்று, கொடக்கல் வாங்கல், பெறுமதி, பயன்பாடு, இடச் சந்தை
   4) கொடுக்கல் வாங்கல், பண்டமாற்று, பெறுமதி, திருப்தி, விரிந்த சந்தை
   5) கொடுக்கல் வாங்கல், பண்டமாற்ற, திருப்தி, பெறுமதி, விரிந்த சந்தை (.........)

02. இலங்கை மத்திய வங்கி அறிக்கையிலிருந்து மொத்த தேசிய உற்பத்தி தொடர்பாக பிரித்தெடுக்கப்பட்ட தரவுகளில் சில கீழே தரப்படுகின்றன.

| | ரூபா 10 இலட்சங்களில் |
|---|---|
| விவசாயம் | 267404 |
| காடு | 15832 |
| மீன் பிடி | 32407 |
| சுரங்கமறுத்தலும் கனிய அகழ்வும் | 60079 |
| உற்பத்தி | 458660 |
| நிர்மாணம் | 177912 |
| போக்குவரத்து, களஞ்சியம், தொடர்பாடல் | 368653 |

   மேலே தரப்பட்ட தகவல்களுக்கேற்ப ஆரம்ப, விவசாய, கைத்தொழில் உற்பத்திகளின் பெறுமதியினை முறையாகக்காட்டும் விடை எது?
   1) ரூபா மில்லியன் 315643/ 267424/ 375722 ஆகும்.
   2) ரூபா மில்லியன் 375722 /315643/ 696651 ஆகும்.
   3) ரூபா மில்லியன் 108318 /283236/ 636572 ஆகும்.
   4) ரூபா மில்லியன் 834382/ 375722 /315643 ஆகும்.
   5) ரூபா மில்லியன் 636572 /299811/ 1380947 ஆகும். (.........)

03. வணிகப்பரம்பலின் முக்கியமான சந்தர்ப்பங்களை ஒழுங்குமுறையாகக் காட்டியுள்ள விடையினைத் தெரிவு செய்க.
1) பணப்பாவனை, பண்டமாற்று, கைத்தொழில் புரட்சி, தகவல் பொருளாதாரம்
2) பண்டமாற்று, பணப்பாவனை, கைத்தொழில் புரட்சி, தகவல் பொருளாதாரம்
3) பணப்பாவனை, பண்டமாற்று, கைத்தொழிலி புரட்சி, தகவல் பொருளாதாரம்
4) பண்டமாற்று, கைத்தொழில் புரட்சி, பணப்பாவனை, தகவல் பொருளாதாரம்
5) கைத்தொழில் புரட்சி, பண்டமாற்று, பணப்பாவனை, தகவல் பொருளாதாரம். (.........)

04. பின்வரும் கூற்றுக்களுள் நேரில் உற்பத்திச் சந்தரப்பத்தை விளக்குகின்ற கூற்றைத் தெரிவு செய்க.
1) உதித் என்பவர் தனது பொழுது போக்கிற்காக உள்நாட்டு மருத்துவ மூலிகைகளைக் கொண்ட மூலிகைத் தோட்டமொன்றை நடாத்திச் செல்கின்றார். அம்மூலிகைகளை விற்கும் உத்தேசம் அவரிடம் இல்லை.
2) சதமாலி ஆடையுற்பத்தியில் சிறந்த தேர்ச்சியினைக் கொண்டுள்ளதுடன் அவர் தமது பிள்ளைகளக்காக நவீன வடிவமைப்புடன் கூடிய ஆடைகளை உற்பத்தி செய்கின்றார்.
3) அரவிந்த் சூரிய சக்தியினால் இயக்கப்படுகின்ற கணினியொன்றை உருவாக்கியுள்ளதுடன், அது தொடர்பிலான "பேட்டன்ட்" அனுமதிப் பத்திரத்தையும் பெற்றுள்ளார்.
4) உஷா மலர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற அலங்காரங்கள் தொடர்பில் விசேட திறமை கொண்டுள்ளதுடன் அவர் திருமணம் மற்றும் ஏனைய விழாக்களின்போது மேற் கொள்ளப்படுகின்ற அலங்காரங்களுக்கான கட்டளைகளை கட்டணங்களைப் பெற்று நிறைவேற்றி வருகின்றார்.
5) ஓய்வு பெற்ற ஆசிரியரான சதாம் பொழுது போக்காக சிறுவர் கதைகளை எழுதி தனது காலத்தைக் கழித்து வருகின்றார். (.........)

05. சர்வதேச சுற்றாடல் தினமாகக் கருதப்படுவது.
1) ஒவ்வொரு வருடத்திலும் மார்ச் 15 ம் திகதியாகும்.
2) ஒவ்வொரு வருடத்திலும் ஒக்டோபர் 14ம் திகதியாகும்.
3) ஒவ்வொரு வருடத்திலும் ஏப்ரல் 21ம் திகதியாகும்.
4) ஒவ்வொரு வருடத்திலும் மே 28 ம் திகதியாகும்.
5) ஒவ்வொரு வருடத்திலும் ஜூன் 05ம் திகதியாகும். (.........)

06. வணிகமொன்றுடன் தொடர்புடைய சூழல் காரணிகளின் போக்குகள் சில பின்வருமாறு,
A – முதியோரின் எண்ணிக்கை அதிகரித்தல்
B – நுகர்வோர் அமைப்புக்கள் பலமடைதல்
C – ஊழியர்கள் தானாக விலகுதல் குறைவடைதல்
D – தொழில் வழங்குநர் - ஊழியர் பிரச்சினை அதிகரித்தல்
E - மூலப்பொருள் வீணாதல் குறைவடைதல்
F – நிறுத்திவைத்த உழைப்பு குறைவடைதல்
G – போட்டி அதிகரித்தல்
H – பொருளாதாரத்தின் விலைமட்டம் அதிகரித்தல்

மேலே தரப்பட்டவற்றுள் அகச் சூழல் காரணிகளின் போக்கினைக் கொண்டுள்ள தொகுதி எது?
1) ABCD 2) CDEF 3) BCEH 4) BDEG 5) CFGH (.........)

07. வணிகங்கள் அடிப்படையில் பிரிந்து செல்கின்ற முறையினை சரியாகக்க காட்டும் விடையினைத் தெரிவு செய்க.
1) வியாபாரம், வர்த்தகம்
2) கைத்தொழில், துணைச் சேவைகள்
3) கைத்தொழில், வியாபாரம்
4) கைத்தொழில், வர்த்தகம்
5) வியாபாரம், துணைச் சேவைகள் (.........)

08. மனித தேவைகள் பல்வேறுபட்டவை, இதில் செல்வாக்குச் செலுத்துகின்ற மக்கள் காரணியொன்றாகக் குறிப்பிடக்கூடியது.
1) வருமான மட்டம்
2) மரபுகள் சம்பிரதாயங்கள்
3) வானிலை நிலைமை
4) சம்பள மட்டம்
5) ஆண்பெண் பால்வேறுபாடு (.........)

09. வணிகச்சூழல் வகைகளும் அதற்குரிய காரணிகளும் கீழே தரப்பட்டுள்ளன, இவற்றுள் அண்மிய சூழலுக்குரிய காரணிகளை மாத்திரம் உள்ளடக்கிய தொகுதி எது?
1) வாடிக்கையாளர், சமூக கலாச்சாரம்
2) சமூக கலாச்சாரம், நிறுவனக் கட்டமைப்பு
3) போட்டி முதலீட்டாளர், நிறுவனக் கட்டமைப்பு
4) போட்டி முதலீட்டாளர், வாடிக்கையாளர்
5) நிறுவனக் கட்டமைப்பு, மக்கள். (.........)

10. வணிக அடிப்படைக்குரிய மூலங்களை ஒழுங்கு முறையாகக் காட்டியுள்ள விடை எது?
1) தேவைகளும் விருப்பங்களும், இலாபம், வாடிக்கையாளர், உற்பத்திப் பொருள்.
2) உற்பத்திப் பொருள், இலாபம், வாடிக்கையாளர், தேவைகளும் விருப்பங்களும்.
3) இலாபம், உற்பத்திப் பொருள், தேவைகளும் விருப்பங்களும், வாடிக்கையாளர்
4) வாடிக்கையாளர், தேவைகளும் விருப்பங்களும், உற்பத்திப்பொருள், இலாபம்.
5) வாடிக்கையாளர், இலாபம், உற்பத்திப்பொருள், தேவைகளும் விருப்பங்களும். (.........)

11. பின்வரும் பண்புகளுள் வணிகமொன்றிற்குரிய பண்பு எது?
   1) பொருளாதாரக் கருமமொன்றாகக் காணப்படல்
   2) அனுகூலங்களினூடாக ஊக்குவிக்கப்படல்
   3) இடரொன்று காணப்படல்.
   4) பொருட்கள் மற்றும் சேவைகளின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்சியாக இடம்பெறல்.
   5) மேலே தரப்பட்ட அனைத்தும். (.........)

12. வணிக அமைப்பொன்றின் எதிர்பார்ப்புக்கள் ஒழுங்குமுறையாக முன்வைக்கப்பட்டுள்ள விடையினைத் தெரிவு செய்க.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1) தூர நோக்கு | → | இலட்சிய நோக்கு | → | கொள்கை | → | குறிக்கோள் | |
| 2) இலட்சிய நோக்கு | → | தூர நோக்கு | → | இலக்கு | → | நோக்கம் | |
| 3) இலட்சிய நோக்கு | → | தூர நோக்கு | → | குறிக்கோள் | → | இலக்கு | |
| 4) தூர நோக்கு | → | இலட்சிய நோக்கு | → | நோக்கங்கள் | → | இலக்கு | |
| 5) தூர நோக்கு | → | இலட்சிய நோக்கு | → | இலக்கு | → | நோக்கங்கள் | (.........) |

13. காமினி சிங்கப்பூருக்கு சுற்றுலா சென்று அங்கு கணினி மற்றும் அதனுடன் தொடர்புடைய உபகரணங்களை மொத்தமாகக் கொள்வனவு செய்து கப்பல் மூலம் நாட்டிற்கு கொண்டு வந்து நாடுபூராவுமுள்ள கணினி விற்பனை நிலையங்களுக்கு விற்பனை செய்கின்றார். பண அறவீடுகளையும், பணக் கொடுப்பனவுகளையும் அவர் வங்கியினூடாக மேற்கொள்கின்றார். இம்முழுமையான செயற்பாட்டினை எப்பெயர் கொண்டு அழைக்கலாம்?
   1) இறக்குமதி 2) வியாபாரம் 3) கைத்தொழில் 4) வர்த்தகம் 5) இரண்டாம் நிலை உற்பத்தி
   (.........)

14. வணிகமொன்றின் உள்ளீடுகளை மாத்திரம் உள்ளடக்கிய சரியான தொகுதி எது?
   1) நிலம், உழைப்பு, மூலதனம், திட்டமிடல், அறிவு, காலம்
   2) உழைப்பு, மூலதனம், காலம், தகவல்கள், முயற்சியாண்மை. நிலம்
   3) அறிவு, மூலதனம், அமைப்பு, காலம், உழைப்பு, காசு, முயற்சியாண்மை.
   4) உழைப்பு, முயற்சியாண்மை, இடர்களை ஏற்றல், மூலதனம், தரவுகள், காலம், தகவல்கள்
   5) உழைப்பு, அமைப்பு, தகவல்கள், காலம், மூலதனம், காசு, இயந்திரம். (.........)

15. வணிகத்துறையில் நவீன போக்கினை உள்ளடக்கிய சரியான விடையினைத் தெரிவு செய்க.
   1) விற்பனையை மேம்படுத்தல், சந்தைப்பங்கினை விரிவுபடுத்தல், சந்தையில் நிலைத்திருத்தல், பூகோள மயமாதல்.
   2) இலத்திரனியல் வணிகம், தொழில் நுட்ப முன்னேற்றம், பசுமையுற்பத்தி, விற்பனையை மேம்படுத்தல்
   3) பூகோள மயமாதல், சூழல், தரமான பொருட்கள் சேவைகளை உற்பத்தி செயதல், சந்தையில் நிலைத்திருத்தல்.
   4) விற்பனையை மேம்படுத்தல், பூகோளமயமாதல், தொழில் நுட்பமுன்னேற்றம், சூழல் பாதுகாப்பு, உற்பத்தி, சந்தையில் நிலைத்திருத்தல்.
   5) பூகோள மயமாதல், இலத்திரனியல் வணிகம், தொழில் நுட்ப முன்னேற்றம், சூழல் தொடர்பில் கவனம் செலுத்துதல். (.........)

16. வணிகமொன்றினால் பல்வேறு நபர்களுக்கு நிறைவு செய்யவேண்டிய சமூகப் பொறுப்புக்களில் சில கீழே தரப்பட்டுள்ளன. இவற்றுள் வாடிக்கையாளருக்கு மாத்திரம் நிறைவு செய்ய வேண்டிய சமூகப் பொறுப்புக்களை காட்டுகின்ற விடைத் தொகுதி எது?
   A – சமத்துவநிலை
   B – சேதத்தை இழிவுபடுத்துதல்
   C – சுகாதார வசதிகள்
   D – நியாயமாக நடந்துகொள்ளல்
   E – பொருளாதார நலன்களைப் பெற்றுக் கொள்ளல்
   F – உரிமைகளைப் பாதுகாத்தல்.
   1) A,B,C 2) B,C,D 3) A,E,F 4) B,D,F 5) A,B,D (.........)

17. சமூகப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதன் மூலம் வணிகமொன்றிற்கு கிடைக்கப்பெறுகின்ற அனுகூலமல்லாதது.
   1) வணிகத்தின் நீண்டகால வாழ் தன்மை உறுதிப்படுத்தப்படல்
   2) வணிகத்தின் நன்மதிப்பு விருத்தியடைதல்
   3) பசுமை உற்பத்திகளை உருவாக்க முடிதல்
   4) வணிகம் தொடர்பிலான நம்பகத்தன்மை அதிகரித்தல்
   5) வாடிக்கையாளர்களைத் திருப்திப்படுத்த முடிதல். (.........)

18. வணிகமொன்று பொருளாதாரம் நிலைபேறானது என்பதற்காகக் கருமமாற்றும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்களை மாத்திரம் உள்ளடக்கிய தொகுதி எது?
   A – பொருளாதார விருத்தியும் ஸ்திரத்தன்மையும்.
   B – உற்பத்தியும் நுகர்வும்
   C - இடர் முகாமைத்துவம்
   D – மனித மூலதனத்தைப் பராமரித்தல்
   E – வேலைவாய்ப்பு
   F – பயனுறுதி
   1) A,B,C,D 2) A,D,E,F 3) B,C,D,E 4) A,B,E,F 5) B,D,E,F (.........)

19. வணிகமொன்றிற்கு சமூகம் மற்றும் கலாசாரம் நிலை பேறானது என்பதை உறுதிப்படுத்துவதற்காக எடுக்கக் கூடிய நடவடிக்கைகளை உள்ளடக்கிய விடைத் தொகுதியினைத் தெரிவு செய்க.

A – பொதுமக்களுக்கு சமமான சந்தர்ப்பங்களை வழங்கல்.
B – மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான பங்களிப்பினை வழங்கல்
C – மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்.
D – மனிதர்களின் பல்லினத்தன்மைக்கு மதிப்பளித்து செயலாற்றல்.
E – சமூக பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு பங்களிப்புக்களை வழங்கல்
F - சட்டத்தையும், சமாதானத்தையும் பேணுவதற்கு பங்களிப்பினை வழங்கல்.

1) A,B,C,E   2) A,C,E,F   3) B,D,E,F   4) B,C,E,F   5) B,C,D,E   (.........)

20. வணிகமொன்றிற்கு சூழலானது நிலைபேறானது என்பதை உறுதிப்படுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கையொன்று
1) வளங்களை வினைத்திறனாகப் பயன்படுத்துதல்
2) சமூகத்தின் பல்லினத்தன்மையினைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்தல்.
3) கலாச்சாரச் சூழலைப் பாதுகாத்தல்
4) சமூகங்களிடையே ஒற்றுமையை உருவாக்கல்
5) புத்தாக்கங்களை அறிமுகப்படுத்துதல்.   (.........)

21. பொருளாதார நோக்கங்களுள் சில கீழே தரப்பட்டுள்ளன.

அ) நடைமுறைச் செலவுகளை குறைத்தல்   ஆ) விலையின் நிலையான தன்மை
இ) நிலையான வருமானப்பரம்பல்   ஈ) பாதுகாப்புச் சேவையினை நடாத்திச் செல்லல்
உ) பூரணமான வேலைவாய்ப்பு   ஊ) வரவு செலவுத்திட்டத்தை சமர்ப்பித்தல்.

மேற்குறிப்பிட்டவற்றுள் அரசின் பொருளாதார நோக்கங்களாக குறிப்பிட முடியாதவை.
1) அ, ஆ, இ   2) அ, உ, ஊ   3) அ, இ, ஈ   4) ஆ, இ, ஈ   5. ஆ, இ, உ (.........)

22. கீழே X மற்றும் Y நிரல்களில் முறையே போக்குவரத்து மூலங்களும் அவற்றிற்குரிய உதாரணங்களும் காட்டப்பட்டுள்ளன. X,Y நிரல்களைச் சீராக்கும் போது கிடைக்கும் சரியான விடையாக அமைவது,

| X | Y |
|---|---|
| 1) தேசிய வருமான வரித்திணைக்களம் | அ) இறக்குமதி வரி |
| 2) மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் | ஆ) ஒப்படைப்பு வரி |
| 3) கலால் வரித்திணைக்களம் | இ) தனியார் வருமானவரி |
| 4) சுங்கத் திணைக்களம் | ஈ) உற்பத்திவரி |
| 5) உள்ளூராட்சி நிறுவனம் | உ) இறைவரி |

1) 1அ, 2ஆ, 3இ, 4உ, 5ஈ   2) 1அ, 2ஆ, 3உ, 4இ, 5ஈ   3) 1இ, 2ஆ, 3ஈ, 4அ, 5உ
4) 1இ, 2ஈ, 3ஆ, 4அ, 5உ   5) 1இ, 2ஈ, 3அ, 4ஆ, 5உ   (.........)

23. வரி மற்றும் வரியல்லாத வருமானங்களை உள்ளடக்கியே அரசின் வருமானமானது உருவாக்கப்பட்டடுள்ளது. வரியல்லாத வருமானத்தில் உள்ளடக்கப்படுபவைகளை மாத்திரம் கொண்ட விடையினைத் தெரிவு செய்க.
1) தனியார் வருமானவரி, நிறுத்திவைத்த வரி, அனுமதிப்பத்திரக் கட்டணம், பெறுமதி சேர்வரி
2) அனுமதிப்பத்திரக்கட்டணம், தனியார் வருமானவரி, இலாபமும் பங்கிலாபமும், லொத்தர் சீட்டு விற்பனை
3) அனுமதிப்பத்திரக் கட்டணம், இலாபமும் பங்கிலாபமும், லொத்தர் சீட்டு விற்பனை, சமூகப்பாதுகாப்பு பங்களிப்பு நிதி.
4) இலாபமும் பங்கிலாபமும், அனுமதிப்பத்திரக் கட்டணம், தனியார் வருமானவரி, சமூகப்பாதுகாப்பு பங்களிப்பு நிதி.
5) தனியார் வருமானவரி, இலாபமும் பங்கிலாபமும், லொத்தர் சீட்டு விற்பனை, பெறுமதி சேர்வரி   (.........)

24. இலங்கையில் நடைமுறையிலுள்ள வரிவகைகளில் சில பின்வருமாறு

A – சுங்கவரி   B - மூலதன இலாபவரி   C – உள்நாட்டு பண்டவரி
D – புரள்வு வரி   E – வருமானவரி   F – கம்பனிவரி

மேலே தரப்பட்ட வரிவகைகளை நேர் வரி, நேரில் வரி என வகைப்படுத்தும் போது கிடைக்கும் சரியான விடை எது?
1) ABC / DEF   2) ACE/BDF   3) ACD/BEF   4) ABF/CDE   5. ACF/BDE (.........)

25. நிதிக் கட்டுப்பாட்டின் பிரதான கருவியொன்றாக வட்டி வீதம் பயன்படுத்தப்படுகிறது. இது வணிகங்களில் பல் வேறு முறைகளில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இது தொடர்பிலான பின்வரும் கூற்றுக்களுள் சரியான கூற்றைத் தெரிவு செய்க.
   1) மத்திய வங்கி தனது வட்டி வீதத்ததைக் குறைக்கும் போது வணிக வங்கிகளினது வட்டி வீதமும் குறைவடையும்.
   2) மத்திய வங்கி தனது வட்டிவீத்தைக் குறைக்கும் போது வணிக வங்கிகளின் வட்டி வீதம் அதிகரிக்கும்.
   3) மத்திய வங்கி தனது வட்டி வீத்தைக் குறைக்கும் போது முதலீட்டாளர்கள் பெற்றுக் கொள்கின்ற கடனின் அளவும் குறைவடையும்.
   4) மத்திய வங்கி தனது வட்டி வீதத்தை அதிகரிக்கும் போது முதலீட்டுக்காக எடுக்கப்படுகின்ற கடனின் அளவும் அதிகரிக்கும்.
   5) மத்திய வங்கி தனது வட்டி வீதத்தை குறைப்பதனால் முதலீட்டாளர்களுக்கு எந்தப்பாதிப்பும் இல்லை.

(.........)

26. வணிகக்கருமங்களைக் கட்டுப்படுத்துவதற்காக அரசு பின்பற்றுகின்ற பிரதான கொள்கையாக வெளிநாட்டு வியாபாரக் கொள்கையினைக் குறிப்பிடலாம். பின்வரும் கூற்றுக்களுள் வெளிநாட்டு வியாபாரக் கொள்கையின் கீழ் அரசு வணிகங்களில் செல்வாக்குச் செலுத்துவதற்கான காரணங்களை உள்ளடக்கிய மிகச் சரியான விடைத் தொகுதியினைத் தெரிவு செய்க.
   1) ஏற்றுமதியினை ஊக்குவித்தல், வட்டி வீதத்தில் மாற்றம் செய்தல். அரச செலவுகளில் மாற்றம் செய்தல், தனியார் மயப்படுத்தல்.
   2) ஏற்றுமதியினை ஊக்குவித்தல், நாணயமாற்றுகொள்கையினை மாற்றுதல். சுங்கவரியில் மாற்றங்களை செய்தல் (குறைத்தல் /அதிகரித்தல்), இறக்குமதிக் கட்டுப்பாட்டினைத் தளர்த்தல்.
   3) ஏற்றுமதியினை ஊக்குவித்தல், தேர்ச்சிகளை விருத்தி செய்தல், வட்டி வீதங்களில் மாற்றம் செய்தல், அரச செலவுகளில் மாற்றம் செய்தல், (குறைத்தல் /அதிகரித்தல்)
   4) ஏற்றுமதியினை ஊக்குவித்தல், தனியார் மயப்படுத்தல், மாறும் ஒதுக்க வீதத்தை நிர்ணயித்தல். வட்டிவீத்ததை மாற்றுதல்.
   5) ஏற்றுமதியினை ஊக்குவித்தல், வட்டிவீதங்களில் மாற்றம் செய்தல், பல்வேறு வியாபார நடவடிக்கைகள், இறக்குமதி கட்டுப்பாட்டை தளர்த்தல் (.........)

27. கீழே X நிரலில் நுகர்வோர் உரிமைகளை வெளியிட்ட பிரிவினர்களும் Y நிரலில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நுகர்வோர் உரிமைகளும் காட்டப்பட்டுள்ளது.

| X | Y |
|---|---|
| A –ஜோன் எப். கென்னடி<br>B – சர்வதேச நுகர்வோர்கள் | 1. அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளல்<br>2. தேகாரோக்கியம் கொண்ட சூழலொன்றில் வாழ்தல்<br>3. தகவல்களை அறிந்து கொள்ளல்<br>4. இழப்பீட்டைப் பெற்றுக் கொள்ளல்<br>5. தெரிவு செய்தல்<br>6. நுகர்வோர்க் கல்வியை பெற்றுக்கொள்ளல்<br>7. செவிமடுத்தல்<br>8. பாதுகாப்பை ஏற்படுத்திக் கொள்ளல். |

X,Y நிரல்களை ஒப்பீடு செய்யும் போது கிடைக்கும் சரியானவிடை
1) A – 8,2,3,4 B – 5,6,7,1 2) A – 2,6,7,1 B – 8,3,4,5 3) A – 8,3,5,7 B – 2,4,6,1
4) A – 2,3,4,5 B – 8,6,7,1 5) A – 8,2,4,5 B – 3,6,7,1 (.........)

28. பின்வரும் நியமங்களில் சூழல் முகாமைத்துவ முறைமைக்கான நியமமாக அமைவது,
   1) ISO 14001 2) G.M.P சான்றுப்படுத்தல் 3) ISO 9001
   4) HACCP முறைமைச் சான்றுப்படுத்தல். 5) ISO 18001 (.........)

29. யோகட் ஒன்றைக் கொள்வனவு செய்த கமல் அதன் காலாவதியாகும் திகதி முடிவடைந்துள்ளதை அறிந்து கொண்டான். இதன் மூலம் மீறப்பட்டுள்ள நுகர்வோர் உரிமை.
   1) தெரிவு செய்வதற்கான உரிமை
   2) அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்கான உரிமை.
   2) பாதுகாப்பை ஏற்படுத்திக் கொள்வதற்கான உரிமை
   4) தேகாரோக்கியம் கொண்ட சூழலொன்றில் வாழ்வதற்கான உரிமை
   5) செவிமடுப்பதற்கான உரிமை (.........)


30. நுகர்வோர் அலுவல்கள் தொடர்பான அதிகார சபையின் நோக்கங்கள் மற்றும் கருமங்களில் சில கீழே தரப்பட்டுள்ளது.
   1) நுகர்வோரின் உயிர் மற்றும் உடமைகளுக்கு தீங்கை ஏற்படுத்தக் கூடிய பொருட்களை விற்பதற்கு எதிராக பாதுகாப்பினை வழங்கல்.
   2) போட்டிக்கெதிரான நடத்தைகள், தன்னாதிக்க நிலமை என்பவற்றை பொருத்தமற்ற வகையில் பயன்படுத்துவதைப் பரீட்சித்தல்.
   3) பொருட்கள் சேவைகளை வழங்கும் நபர்களிடையே வினைதிறனான போட்டியினை நடைமுறைப்படுத்தலும், விருத்தி செய்தலும்.
   4) நியாயமற்ற வியாபார நடைமுறைகள் மட்டுப்படுத்தப்பட்ட வியாபார நடைமுறைகள் மற்றும் வியாபாரிகளினால் மேற்கொள்ளப்படுகின்ற வேறு முறையிலான நுகர்வோர் சுரண்டல்களுக்கு உட்படுவோருக்கு உதவுதல்
   5) நுகர்வோர்களுக்கு போட்டி விலையில் பொருட்கள் மற்றும் சேவைகளை தேவையான அளவில் வழங்குவதற்கு உறுதியளித்தல்.

   மேலே தரப்பட்டவைகளுள் நுகர்வோர் அலுவல்கள் தொடர்பிலான அதிகார சபையின் நோக்கங்களை மாத்திரம் கொண்ட தொகுதியினைத் தெரிவு செய்க.
   1) 1, 2, 3    2) 1, 4, 5    3) 3, 4, 5    4) 2, 3, 4    5) 1, 2    (.........)

❖ **இலக்கம் 31 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு விடையளிக்கும் போது பொருத்தமான சொற்களைப் பயன்படுத்தி இடைவெளியினை நிரப்பவும்.**

31. அ) வணிகம் நாடொன்றின் ...................................................................................................... க்கும் மற்றும் ......................................................................... க்கும் பங்களிப்புச் செய்யும்.
   ஆ) உற்பத்திப் பொருட்களுக்கு காணப்படுகின்ற ............................................................................... தின் அடிப்படையில் தேவைகள் உருவாவதுடன் .............................................. ஊடாக அது எளிய கேள்வியொன்றாக மாற்றமடையும்.

32. அ) வணிகமானது பல்வேறு அடிப்படையில் கீழ் வகைப்படுத்துகின்ற முறையிளைக் காட்டும் பின்வரும் பாய்ச்சல் கோட்டு வரைபடத்தில் இடைவெளிகளை சரியான சொற்களைப் பயன்படுத்தி பூரணப்படுத்துக.




33. அ) வணிகத்தின் அகச்சூழலினால் உருவாகின்ற சாதகம் எனப்படுகின்ற அனுகூலமான நிலமை ................................................ எனப்படுவதுடன், பாதகம் எனப்படுகின்ற அனுகூலமற்ற நிலமை ................................................ எனவும் அழைக்கப்படும்.
   ஆ) வணிகச் சூழலின் புறச்சூழலானது 1) ................................................... 2) ............................................................ எனும் இரு பகுதிகளைக் கொண்டது.

34. அ) தேவைகளை தீர்ப்பதற்காக மேற்கொள்ளப்படுவது ..................................................................... எனப்படுவதுடன், நிகழ்காலத்தில் பல்வேறு வாடிக்கையாளர்கள் ஒன்று சேருமிடம் .............................................. எனவும் அழைக்கப்படும்.
   ஆ) சுய தேவைக்காக மேற்கொள்ளப்படுகின்ற உற்பத்திகள் ........................................... என அழைக்கப்படுவதுடன், சந்தைக் கேள்விக்காக மேற் கொள்ளப்படுகின்ற உற்பத்திகள் ........................................... எனவும் அழைக்கப்படும்.

35. அ) வாடிக்கையாளர்களின் தேவை விருப்பங்களை இனம் கண்டு அவற்றைத் திருப்திப்படுத்துவதற்காகக் கருமமமாற்றல் ............................................ எனப்படும்.

ஆ) வணிகக்கருமங்களுடன் தொடர்புடைய ஆவணங்களைப் பேணுதல், தொடர்பாடல் கருமங்களை நடாத்திச் செல்லல் என்பவை வணிகமொன்றின் ........................................ கருமங்களில் உள்ளடங்கும்.

36. அ) "வணிகம் சமூகத்திற்கு மீள வழங்குபவைகளே சமூகரீதியான பொறுப்புக்கள்" என ................................................................................ வரைவிலக்கணம் கூறியுள்ளது.

ஆ) எதிர்காலப் பரம்பரையினரின் தேவைகளை நிறைவு செய்வதற்காகக் காணப்படுகின்ற உரிமையினை மீறாத முறையில் சமகால தேவையினை அடைந்து கெள்வதற்கான அபிவிருத்தி ..................................................... என அழைக்கப்படும்.

37. அ) எதிர் காலப் பரம்பரையினரின் தேவைகளை மீறாத வகையில் சமகால மக்களின் தேவைகளை நிறைவு செய்வதினூடாக மனித விருத்தியினை ஏற்படுத்துதல் ......................................... இனூடாக எதிர்பார்க்கப்படுகிறது.

ஆ) கழிவுப்பொருட்களை பிரித்தெடுத்து அதனை வேறொருவகையான பொருளொன்றை உற்பத்தி செய்யக் கூடிய பொருளொன்றாக மாற்றுதல் .................................................. எனப்படும்.

38. அ) வணிகத்திற்காக உருவாக்கப்பட்ட ஒழுக்கவிழுமியங்களை எழுத்து மூலமாக காட்டும் போது அது .......................................................... எனப்படும்.

ஆ) கழிவுப் பொருள் முகாமைத்துவத்தின்போது நிலைபேறான அபிவிருத்தியினை சிறப்பாக அடைந்து கொள்வதற்கு உலக மட்டத்தில் ......................................................... பாவனையில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

39. அ) கழிவு வீதங்களைக் குறைத்தல் மற்றும் பண்புரிதியான கடன் வரையறையினை நிர்ணயித்தல் என்பவை ............................................................... பயன்படுத்துகின்ற உபகரணங்களாக இருப்பதுடன்

ஆ) அரச செலவுகளைக் குறைத்தல் மற்றும் பற்றாக்குறையான வரவு செலவுத் திட்டத்தை தயாரித்தல் என்பவை ...................................................... கொள்கைக்குரியதாகும்.

40. அ) சர்வதேச நுகர்வோர் தினம் .......................................................... திகதியாகும்.

ஆ) தரமான பொருட்களின் உற்பத்திக்கு நிறுவனங்களை ஊக்குவிப்பும் நோக்கத்துடன் இலங்கைத் தரக்கட்டளைகள் நிறுவனம் ...................................................................... வழங்கி வருகின்றது.

❖ **வினா இலக்கம் 41 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்கு சுருக்கமான, சரியான விடையினைத் தருக.**

41. வணிகச் செயன்முறைக்குரிய நான்கு கருமங்களைத் தருக.

1) ..........................................................................................................................................

2) ..........................................................................................................................................

3) ..........................................................................................................................................

4) ..........................................................................................................................................

42. வணிகச் சூழலைப் பகுப்பாய்வு செய்வதன் மூலம் வணிகரொருவர் அறிந்து கொள்ளக் கூடிய 4 விடயங்களைத் தருக.

1) ..........................................................................................................................................

2) ..........................................................................................................................................

3) ..........................................................................................................................................

4) ..........................................................................................................................................

43. பொருட்களுடன் ஒப்பிடும் போது சேவைகளில் காணக் கூடிய 04 பண்புகளைத் தருக.

1) ................................................................................ 2) ..................................................................................

3). ................................................................................ 4) ..................................................................................

44. இலத்திரனியல் வணிகம் சமகாலத்தில் பிரபல்யமடைவதில் செல்வாக்குச் செலுத்தியுள்ள 04 காரணிகளை தருக.

1) ..........................................................................................................................................................

2) ..........................................................................................................................................................

3) ..........................................................................................................................................................

4) ..........................................................................................................................................................

45. வணிக நிறுவனமொன்றிலுள்ள ஊழியர்கள் வணிகத்தில் ஆர்வம் காட்டுவதற்கான 04 காரணங்களைத் தருக.

1) ..........................................................................................................................................................

2) ..........................................................................................................................................................

3) ..........................................................................................................................................................

4) ..........................................................................................................................................................

46. வணிகத்தில் ஆர்வம் காட்டுகின்ற பிரிவினருக்கும் மற்றும் பொதுவான சமூகத்தினருக்கும் அழுத்தங்களை ஏற்படுத்துகின்ற 04 காரணிகளைத் தருக.

1) ..........................................................................................................................................................

2) ..........................................................................................................................................................

3) ..........................................................................................................................................................

4) ..........................................................................................................................................................

47. கழிவுப்பொருள் முகாமைத்துவத்தில் 4R எண்ணக்கருவினை பிரதி நிதித்துவப்படுத்துகின்ற 04 காரணிகளையும் தருக

1) ..........................................................................................................................................................

2) ..........................................................................................................................................................

3) ..........................................................................................................................................................

4) ..........................................................................................................................................................

48. சுங்கவரி, அரச கடன், உற்பத்தி மானியம், அரச பிணைப்பத்திரக் கொள்வனவு, போன்ற பொருளாதாரக் கட்டுப்பாட்டுக் கருவிகள் எப்பொருளாதார கொள்கைக்கு உரித்துடையது என்பதை முறையாகக் காட்டுக.

1) ..........................................................................................................................................................

2) ..........................................................................................................................................................

3) ..........................................................................................................................................................

4) ..........................................................................................................................................................

49. இலங்கையில் நுகர்வோர் பாதுகாப்பிற்காகச் செயற்படுகின்ற 04 அரச நிறுவனங்களைத் தருக.

1) ..........................................................................................................................................................

2) ..........................................................................................................................................................

3) ..........................................................................................................................................................

4) ..........................................................................................................................................................

50. இலங்கைத் தரக்கட்டளைகள் நிறுவனத்தின் 04 கருமங்களைத் தருக.

1) ..........................................................................................................................................................

2) ..........................................................................................................................................................

3) ..........................................................................................................................................................

4) ..........................................................................................................................................................

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை/ All Rights reserved

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

32 T II

முதலாந் தவணைப் பரீட்சை – தரம் 12 – 2018
First Term Test - Grade 12 - 2018

வணிகக்கல்வி II
Business Studies II

சுட்டெண் : ........................ காலம் : 3 மணி

**அறிவுருத்தல் :**
**சகல வினாக்களுக்கும் விடையளிக்க.**

01.

(i) அ) ‘வணிகர்கள் விருப்பங்களை தோற்றுவிக்கின்றனர்’ இக்கூற்றினை விளக்குக. (2 புள்ளிகள்)

ஆ) “சமகால சமுகத்தில் மனிதனின் நீடித்த வாழ்விற்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் வணிகங்கள் அத்தியவசியமான காரணியொன்றாகும்.” இக் கூற்றினை விளக்குக. (2 புள்ளிகள்)

(ii) அ) இலாபத்தை உச்சப்படுத்துவதற்கு மேலதிகமாக வணிகமொன்றிற்கு வேறு நோக்கங்களும் காணப்படலாம். அவ்வாறான 04 நோக்கங்களைத் தருக. (2 புள்ளிகள்)

ஆ) வணிகமொன்றின் பிரதான கருமங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(iii) ‘அக்கறை காட்டும் பிரிவினர்கள் வணிகங்கள் தொடர்பில் கவனம் செலுத்துவது போன்றே வணிகங்ளும் அக்கறை காட்டும் பிரிவினர்கள் தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும்’
இவ்வாறு வணிகங்கள் தொடர்பில் அக்கறை காட்டும் பிரிவினர்களைக் குறிப்பிட்டு, அப்பிரிவினர்கள் தொடர்பில் வணிகங்கள் கவனம் செலுத்துவதற்கான காரணங்கள் எவை என்பதை விளக்குக. (4 புள்ளிகள்)

(iv) அ) வணிகமொன்றின் அண்மிய சூழல் காரணிகளைக் குறிப்பிட்டு அவற்றுள் நீங்கள் விரும்பும் இரண்டினை எடுத்து அவை எவ்வாறு வணிகங்களில் தாக்கம் செலுத்துகின்றது என்பதைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ஆ) இலத்திரனியல் வர்த்தகம் மற்றும் இலத்திரனியல் வணிகம் என்பவற்றை வெவ்வேறாக விளக்குக. (2 புள்ளிகள்)

(v) வணிகமொன்றின் உண்மையான வெற்றிக்குரிய காரணங்களைக் குறிப்பிட்டு விளக்குக. (4 புள்ளிகள்)

02. (i) அ) வணிகமொன்றில் தாக்கம் செலுத்துகின்ற பேரினச் சூழல் காரணிகளைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ஆ) வணிகக்கருமங்களை நடாத்திச்செல்லும் போது பெரும்பாலும் பேரினச்சூழல் காரணிகள் சில ஒன்று சேரந்து ஒரேதடவையில் தாக்கம் செலுத்தும். அவ்வாறான இரு சந்தர்ப்பங்களை உதாரணங்களுடன் விளக்குக. (2 புள்ளிகள்)

(ii) அ) சமகாலத்தில் வணிக நிறுவனங்கள் முகம் கொடுக்கும் 04 சவால்களைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ஆ) வணிகச் செயன்முறையினை உள்ளீட்டு: வெளியீட்டுச் செயன்முறையொன்றாக வரைபடமொன்றினூடாக விளக்குக. (2 புள்ளிகள்)

(iii) வணிகக் கருமங்கள் 04 இனைக் குறிப்பிட்டு அவற்றைச் சுருக்கமாக விளக்குக. (4 புள்ளிகள்)

(iv) அ) தேவை, விருப்பங்கள் இரண்டுக்குமிடையிலான 04 வேறுபாடுகளைத் தருக. (2 புள்ளிகள்)

ஆ) “விருப்பம் என்பது ஆசையாகும்” நீங்கள் இக்கூற்றினை ஏற்றுக்கொளகின்றீர்களா? உங்கள் விடையினை உதாரணத்துடன் விளக்குக. (2 புள்ளிகள்)

(v) சிறப்புத் தேர்ச்சி என்பதை விளக்குவதுடன் அதிலுள்ள பிரிவுகளைக் குறிப்பிட்டு அவற்றைச் சுருக்கமாக விளக்குக. (4 புள்ளிகள்)

03. (i) அ) வணிகமொன்றினால் சமூக பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட வேண்டிய 04 பிரிவினர்களைத் தருக. (2 புள்ளிகள்)

ஆ) வணிகங்களினால் ஊழியர்களுக்கு நிறைவேற்றப்பட வேண்டிய 04 சமூக பொறுப்புக்களைத் தருக. (2 புள்ளிகள்)

(ii) அ) நிலைபேறான சூழல் பாதுகாப்பினூடாக எதிர்பார்க்கப்படுவது என்ன என்பதை தெளிவுபடுத்துக. (2 புள்ளிகள்)

ஆ) நிலைபேறான சூழல் பாதுகாப்பினை அடைந்துகொள்வதற்காக வணிகங்கள் செயற்படுகின்ற போது அவை முக்கியமாகக் கவனம் செலுத்த வேண்டிய 04 காரணிகளைத் தருக. (2 புள்ளிகள்)

(iii) அ) மீள்சுழற்சியின் மூலமான வெளியீட்டினை இருமுறைகளில் பெற்றுக்கொள்ளக் கூடியவாறும் மேற்கொள்ள முடியும். அவ்விரண்டு முறைகளையும் உதாரணங்களைக் குறிப்பிட்டு விளக்குக. (2 புள்ளிகள்)

ஆ) வணிகக்கருமங்களின் பாதகமான தாக்கங்கள் 04 இனைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(iv) அ) வணிக ஒழுக்க விழுமியங்கள் என்பதனால் கருதப்படுவது யாது? (2 புள்ளிகள்)

ஆ) வணிக ஒழுக்க விழுமிய முறைமையொன்றைக் கட்டியெழுப்பும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய 04 கருமங்களைத் தருக. (2 புள்ளிகள்)

(v) வணிக ஒழுக்க விழுமியங்களைப் பின்பற்றுவது வணிகங்களுக்கு மிகமுக்கியமானது. இது எவ்வாறு முக்கியத்துவம் பெறுகின்றது என்பதனை சுருக்கமாக விளக்குக. (2 புள்ளிகள்)

04. (i) அ) நாடொன்றின் பொருளாதரச் செயற்பாடுகளை நெறிப்படுத்துகின்ற பிரதான நிறுவனம் அரசாகும். அரசானது பொருளாதாரச் செயற்பாடுகளை நெறிப்படுத்துவதன் மூலம் நிறைவேற்றிக் கொள்வதற்கு எதிர்பார்க்கின்ற 06 நோக்கங்களைத் தருக. (2 புள்ளிகள்)

ஆ) வரியானது வாடிக்கையளர்களின் மீது சுமத்தக் கூடியது, சுமத்த முடியாதது என இருவகைப்படும். அதன் வகைகளைக் குறிப்பிட்டு அவை ஒவ்வொன்றிற்குமான உதாரணங்களைத் தந்து சுருக்கமாக விளக்குக (2 புள்ளிகள்)

(ii) அ) அரசு தனது நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு வணிகங்கள் மீது பல்வேறு அழுத்தங்ளை பிரயோகிக்கின்றது. போட்டியாளராகவும் மேற்பார்வையாளராகவும் அழுத்தங்களை ஏற்படுத்துகின்ற இரு முறைகளையும் சுருக்கமாக விளக்குக. (2 புள்ளிகள்)

ஆ) பிஸ்கால் கொள்கை (இறைக்கொள்கை) நிதிக் கொள்கை இரண்டையும் சுருக்கமாக விளக்குக. (2 புள்ளிகள்)

(iii) நாட்டின் விலை மட்டத்தை நீண்ட காலத்திற்கு நிலையான மட்டத்தில் பேணுவதே அரசின் பிரதான நோக்கமாகும். இதற்காக அரசு பின்பற்றுகின்ற நிதிக் கட்டுப்பாட்டுக் கருவிகளைக் குறிப்பிட்டு அவற்றுள் இரண்டைச் சுருக்கமாக விளக்குக. (4 புள்ளிகள்)

(iv) அ) அரசானது பல்வேறு ஊக்குவிப்புக்களை வழங்கி வணிகங்களின் விருத்திக்கு உதவி வருகின்றது. இவ்வாறு அரசு வழங்குகின்ற 06 ஊக்குவிப்புக்களைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ஆ) வணிகங்களுக்கு அரசானது பல்வேறு நிறுவனங்களினூடாக நிதி வசதிகள், முகாமைத்துவ வசதிகள், தொழில் நுட்ப மற்றும் ஆலோசனை வசதிகள், தொழில்களுக்கான நியமங்களை உருவாக்கல் போன்றவற்றை வழங்கி வருகின்றது, வணிகங்களுக்கு மேற்குறிப்பிட்ட வசதிகளை வழங்கி வருகின்ற நிறுவனங்களுக்கு தலா ஒவ்வோர் உதாரணம் தருக. (2 புள்ளிகள்)

(v) “வணிகங்களும் அரசும் தமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக நெருங்கிய தொடர்புகளைப் பேணி செயற்படுகின்றன” நீங்கள் இக்கூற்றை ஏற்றுக்கொள்கின்றீர்களா? இது தொடர்பான உங்களது கருத்தினை சுருக்கமாக விளக்குக. (2 புள்ளிகள்)

05. (i) அ) சமகாலத்தில் நுகர்வோனின் பாதுகாப்பின் தேவை முக்கியத்துவம் பெறுவதற்கான 04 பிரதான காரணிகளைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ஆ) பின்வரும் எண்ணக்கருக்களைச் சுருக்கமாக விளக்குக.
1. நுகர்வோர் பாதுகாப்பு 2. இலங்கைத் தரக்கட்டளைகள் பணியகம் (2 புள்ளிகள்)

(ii) அ) நுகர்வோர் பொறுப்புக்களுக்கும், நுகர்வோர் உரிமைகளுக்குமிடையில் காணப்படுகின்ற தொடர்பினை விளக்குக. (2 புள்ளிகள்)

ஆ) சர்வதேச நுகர்வோர்களிற்கேற்ப நுகர்வோர்களின் 04 பொறுப்புக்களைத் தருக. (2 புள்ளிகள்)

(iii) அ) இலங்கைத் தரக்கட்டளைகள் நிறுவனம் தர நியமங்களை நடைமுறைப்படுத்துகின்ற 4 முறைகளைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ஆ) பாவனையாளர் அலுவல்கள் தொடர்பிலான அதிகாரசபை வணிகங்களுக்கு முக்கியத்துவம் பெறுகின்ற முறையினை விளக்குக. (2 புள்ளிகள்)

(iv) அ) “இலங்கைத் தரக் கட்டளைகள் நிறுவனம் உள்நாட்டு வியாபாரத்திற்கு மாத்திரமன்றி வெளிநாட்டு வியாபாரத்துடனும் தொடர்புடையதாகவும் தர நியமங்களை நடைமுறைப்படுத்திவருகின்றது” தரக்கட்டளைகள் நிறுவனம் வெளிநாட்டு வியாபாரம் தெடார்பிலான தரநியமங்களை நடைமுறைப்படுத்துகின்ற முறையினை விளக்குக. (2 புள்ளிகள்)

ஆ) SLS தரச் சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்காக பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை முறையாகத் தருக. (2 புள்ளிகள்)

(v) அ) பகுத்தறிவுள்ள நுகர்வோனொருவனாக நீங்கள் சந்தையில் நடந்து கொள்வதற்குச் செயற்பட வேண்டிய முறைகளை விளக்குக. (2 புள்ளிகள்)

ஆ) நுகர்வோருக்கும், வணிகங்களுக்கும் நுகர்வோர் பாதுகாப்பு முக்கியத்துவம் பெறுவதற்கான காரணங்கள் தலா 02 வீதம் தருக. (2 புள்ளிகள்)

# முதலாந் தவணைப் பரீட்சை - 2018
# 12 தரம் - வணிகக் கல்வி - Business Studies – விடைகள்
## I பகுதி

| | | |
|---|---|---|
| (01) - 4 | (11) - 5 | (21) - 5 |
| (02) - 2 | (12) - 4 | (22) - 3 |
| (03) - 2 | (13) - 4 | (23) - 3 |
| (04) - 4 | (14) - 2 | (24) - 3 |
| (05) - 5 | (15) - 5 | (25) - 1 |
| (06) - 2 | (16) - 4 | (26) - 2 |
| (07) - 4 | (17) - 3 | (27) - 3 |
| (08) - 5 | (18) - 4 | (28) - 1 |
| (09) - 4 | (19) - 3 | (29) - 3 |
| (10) - 4 | (20) - 2 | (30) - 2 |

31. அ) நீண்ட கால வாழ்தன்மை, அபிவிருத்தி ஆ) விருப்பம், செயற்சக்தி
32. அ) முதலாம், இரண்டாம், மூன்றாம் ஆ) தனியார், பொது
இ) இலாப நோக்கம், இலாப நோக்கமற்ற ஈ) பருமன் அடிப்படையில், சிறிய, நடுத்தர, பாரிய
33. அ) பலம், பலவீனங்கள் ஆ) அண்மிய சூழல், பேரின /பொதுச் சூழல்
34. அ) உற்பததி, சந்தை ஆ) நேர் உற்பத்தி, நேரில் உற்பத்திகள்
35. அ) சந்தைப்படுத்தல் ஆ) நிர்வாகம்
36. அ) பிலிப்பைன்ஸ் ஆ) நிலைபேறான உற்பத்தி
37. அ) அரச சமூக நிலைபேறான உற்பத்தி ஆ) மீள்சுழற்சி
38. அ) ஒழுக்க விழுமிய முறைமை, ஒழுக்க விழுமிய கோவை ஆ) 4R எண்ணக்கரு
39. அ) நிதிக் கொள்கை, பணக் கொள்கை ஆ) பிஸ்கால் கொள்கை
40. அ) மார்ச் - 15 ஆ) இலங்கைத் தேசிய தரச் சான்றிதழ்
41. 1) உற்பத்தி, சந்தைப்படுத்தல், மனிதவள முகாமை, வணிக நிதி வேறு ஏற்றுக் கொள்ளக் கூடிய விடைகள்
42. பலம், பலவீனம், வாய்ப்புக்கள், அச்சுருத்தல்கள்
43. சேவைகளின் 04 பண்புகளைக் குறிப்பிட்டிருந்தால் புள்ளிவழங்குக.
44. 1) ஆவணங்களின்றி வணிகத் தகவல்களைப் பரிமாறிக் கொள்ள முடிதல்.
2) வணிகக் கருமங்களை விரைவாக மேற்கொள்ள முடிதல்
3) செயற்பாட்டுக் கிரயம், இருப்புக் கிரயம் குறைவடைதல்.
4) கணினிப்பாவனை அதிகரித்தல்
5) வாடிக்கையாளர் காலம், உழைப்பு சேமிக்கப்படல்.
45. 1) உயர்ந்த சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளல்
2) மேலதிகக் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளல்
3) பதவி உயர்வினைப்பெற்றுக் கொள்ளல்
4) தொழில் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல்
5) நலன்புரி சேவைகளைப் பெற்றக் கொள்ளல்
46. 1) வணிகப்போட்டி 2) பூகோள மயமாக்கல் 3) இலத்திரனியல் வணிகம்
4) சூழல் மாசடைதல்
47. 1) மீள் சுழற்சி (Recycle) 2) மீள்பாவனை (Reuse) 3) பாவனையைகுறைத்தல் (Reduce)
4) மீள் உருவாக்கம் (Replace)
48. 1) வெளி நாட்டுக் கொள்கை 2) நிதிக் கொள்கை
3) வழங்கல் மற்றும் மேம்பாட்டுக்கொள்கை 4) திறந்த சந்தைக்கொள்கை
49. 1) இலங்கைத் தரக்கட்டளைகள் நிறுவனம்
2) நுகர்வோர் கருமங்கள் தொடர்பிலான அதிகார சபை
3) மத்திய சூழல் அதிகார சபை
4) அளவை அலகு மற்றும் தர நியமத் திணைக்களம்
50. 1) தர நியமங்களை உருவாக்கல் 2) தர நியமங்களை நடைமுறைப்படுத்தல்
3) நியமப்படுத்தல் மற்றும் தரக்கட்டுப்பாட்டினை மேம்படுத்தல்.
4) நுகர்வோர் கல்வியினை பரவலாக்கல்.

## II பகுதி

01. (i) அ) தேவையென்ற காரணியை எவராலும் உருவாக்க முடியாது. அவை மனிதனின் தோற்றத்துடன் உருவானவையாகும். தேவைகளின் அடிப்படையில் உருவாகின்றவையே விருப்பங்களாகும். இவை வருமானம், விளம்பரம், தொழில் நுட்பம் என்பவற்றின் அடிப்படையிலேயே உருவாகும். வணிகர்கள் தமது பொருட்களை வாடிக்கையாளர்களிடம் கொண்டு செல்வதற்கு பல்வேறு உபாயங்களைப்பயன்படுத்தி தகவல்களையும், செய்திகளையும் வழங்கும் போது அவற்றின் காரணமாக வாடிக்கையாளரிடம் உருவாகின்ற உத் வேகம் காரணமாக அவர்களிடம் விருப்பங்கள் உருவாக்கப்படும். இதன் காரணமாகவே வணிகர்கள் விருப்பங்களை உருவாக்குகிறார்கள் எனக் கூறப்படுகின்றது (2 புள்ளிகள்)

ஆ). மனித தேவை விருப்பங்களை நிறைவேற்றுகின்ற எந்தவொரு பொருளாதார நடவடிக்கையும் வணிகம் எனப்படும். மனிதனின் நீண்ட கால வாழ்தன்மைக்கு தேவை, விருப்பங்கள் நிறைவு செய்யப்படல் கட்டாயமானதாகும். அதனால் இச்சிக்கலான சமூகத்தின் தேவை விருப்பங்களை நிறைவேற்றுவதன் மூலம் மனிதனின் நீண்ட கால வாழ் தன்மையினை உறுதிப்படுத்துவதற்கு வணிகங்கள் அத்தியவசியமான காரணியொன்றாகும்.

அதே போன்று புத்தாக்கம் புனைதல், புதிய தொழில் வாய்ப்புச் சந்தர்பபங்களை உருவாக்குதல், மொத்த தேசிய உற்பத்தியினை மேம்படுத்தல் சென்மதி நிழலை பற்றாக்குறையினை இழிவுபடுத்துதல் என்பவற்றிற்கு வணிகங்கள் பங்களிப்புச் செய்வதனால், மனிதரிகளின் வாழ்க்கைத் தரம் உயர்ந்து பொருளாதார அபிவிருத்திக்கு வணிகங்கள் அத்தியவசியமானதாகும்.

(2 புள்ளிகள்)

(ii) அ) 1) சந்தையில் நிலைத்திருத்தல் 2) விற்பனையை உச்சப்படுத்தல் 3) சந்தர்ப்பங்களை அதிகரித்தல் 4) வணிகங்களின் தனிப்பட்ட திருப்தி 5) சமூகத்தினதும் மக்களினதும் நலனோம்பல் (4 க்கு 2 புள்ளிகள்)

ஆ) 1) மனித தேவை வருப்பங்களை நிறைவு செய்தல்
2) வளங்களுக்கு பெறுமதி சேர்த்தல் (2 புள்ளிகள்)

(iii) அ) 1) உரிமையாளர் 2) ஊழியர் 3) கடன் வழங்குநர் 4) அரசு 5) வாடிக்கையாளர்
(4 புள்ளிகள்)

(iv) அ) வாடிக்கையாளர், போட்டியாளர், பதிலீட்டுப் பொருட்களை உற்பத்தி செய்வோர், போட்டியாளர்
(2 புள்ளிகள்)

ஆ) இணைய வலையமைப்பைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்ற வியாபாரம் இலத்திரனியல் வர்த்தகம் எனப்படுவதுடன், இணையம், கணினி தொழில் நுட்பம், தொடர்பாடல் தொழில்நுட்பம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு மனித தேவைகள் விருப்பங்களை நிறைவு செய்கின்ற பொதுவான வணிகக் கருமங்கள் சகலதும் இலத்திரனியல் வணிகம் எனப்படும் (2 புள்ளிகள்)

(v) 1. தரமான பொருட்களை நியாயமாக விலைக்கு வழங்கல்
2. புத்தாக்கம் 3. வாடிக்கையாளரின் தேவை விருப்பங்களை சிறப்பாக விளங்கி அவற்றைத் திருப்தி செய்தல்
4. நிதிச் செயலடைவினை அடைந்து கொள்ளல் (இலாபமீட்டல்)
5. ஊழியர் அர்ப்பணிப்பை அடைந்து கொள்ளல்
6. அக்கறையுடைய நபர்களுக்கு அனுகூலங்களை பெற்றுக் கொடுத்தல் (4 புள்ளிகள்)

02. i) அ) நான்கு பேரினச் சூழல் காரணிகளைக் குறிப்பிடுவதற்கு (4 க்கு 2புள்ளிகள்)
ஆ) சூழல் காரணிகளிடையே காணப்படுகின்ற இடைத் தொடர்பினைச் சரியாகக் காட்டுகின்ற உதாரணத்திற்கு 1 புள்ளி வீதம் 2 உதாரணத்திற்கு 2 புள்ளிகள் (2 புள்ளிகள்)

ii) அ) கடுமையான போட்டி, கூடிய கிரயம், ஊழியர் அழுத்தங்கள் கூடுதலாகக் காணப்படல், நுகர்வோர் அமைப்பு ரீதியாக ஒன்ற சேர்ந்திருத்தல், தொழில் நுட்ப மாற்றங்களுக்கு ஏற்ப மாற்றமடைய வேண்டியிருத்தல், வணிகங்களின், சமூகப்பொறுப்பு (4 புள்ளிகள்)
ஆ) பொருத்தமான வரைபடத்தினூடாக விளக்கியிருந்தால் புள்ளிவழங்கவும் (2 புள்ளிகள்)

iii) வணிகக் கருமங்கள் 04 இனைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்கியிருப்பின் (4 புள்ளிகள்)

iv) அ) தேவை, விருப்பங்களுக் கிடையிலான 4 வேறுபாடுகளுக்கு 2 புள்ளிகள்
ஆ) ஆம், தேவைகளை நிறைவேற்றும் பல்வேறு முறைகளே விருப்பமாகும். நுகர்வோனின் வருமானம், விளம்பரம், சமூகத்தொடர்பு என்பவற்றின் அடிப்படையில் இது தீர்மானிக்கப்படும்.

உதாரணம்

உணவு எனும் தேவை பல்வேறு வழிகளில் நிறைவு செய்யப்படுகின்றது. சோறு, பாண், ரொட்டி, இடியப்பம்.............. போன்றவைகளே அவைகளாகும். இது ஒரு நபரின் ஆசையின் அடிப்படையிலேயே இடம்பெறும் (2 புள்ளிகள்)

v) ஒப்பீட்டு ரீதியில் தனது அனுகூலமான (இயலுமான) செயலொன்றில் தொடர்ந்து ஈடுபடுவதினூடாக ஏற்படுவதாகும். இதிலுள்ள பிரிவுகளாக தனிநபர் சிறப்புத் தேர்ச்சி, பிரதேச சிறப்புத் தேர்ச்சி, தேசியதுமான சிறப்புத் தேர்ச்சி என்பவற்றைக் குறிப்பிடலாம். (4 புள்ளிகள்)

03. i) அ) வாடிக்கையாளர், ஊழியர், உரிமையாளர், சமூகம் (4க்கு 2 புள்ளிகள்)

ஆ) பொருத்தமான 04 சமூகப்பொறுப்பக்களை குறிப்பிடல் (2 புள்ளிகள்)

ii) அ) அடிப்படை மனித தேவைகளுக்கேற்ப வளி, நீர், உணவு, வீடு என்பவை தரமானதாக காணப்படுவதற்கும், அவற்றைப் பாதுகாப்பாகப் பேணிச் செல்வதினூடாக அடிப்படை மனித தேவைகளை நிறைவு செய்வதே நிலைபேறான சூழல் பாதுகாப்பினூடாக எதிர்பார்க்கப்படுகின்றது. எதிர்காலச் சமூகத்தினரின் தேவைக்காக சூழலைப்பாதுகாப்பதாகும். (சரியான விளக்கம் 02 புள்ளிகள்)

ஆ) வளப்பாவனை, மூலப்பொருள், மற்றும் கழிவுப்பொருள் முகாமை, இடர்முகாமைத்துவம், இயற்கை மற்றும் கலாச்சார உரிமைகளைப் பாதுகாத்தல். (2 புள்ளிகள்)

iii) அ) 1) குறைந்த பொறுமதியுடைய மூலப்பொருட்களை உயர்பெறுமதி கொண்ட உற்பத்தி பொருளாக மாற்றுதல் (UP cycle)

உதாரணம் : - கண்ணாடிகளினால் கடதாசி உற்பத்தி செய்தல்.

2) கூடிய பெறுமதி கொண்ட உற்பத்திப் பொருட்களை குறைந்த பெறுமதி கொண்ட மூலப்பொருளாக மாற்றுமல்.

உதாரணம் :- யப்பானில் பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்ட வாகனங்களை உடைத்து இரும்பாக மாற்றுதல். (உதாரணங்களுடனான விளக்கத்திற்கு 2 புள்ளிகள்)

ஆ) கடுமையான போட்டியினூடாக நுகர்வோர் ஏமாற்றப்படல்

- ஊழியர்கள் நலனோம்பல் தொடர்பில் ஆர்வம் காட்டாமை
- இயற்கை வளங்கள் வீணாகும் வகையில் உற்பத்திகளில் ஈடுபடல்
- சூழல் மாசடையும் வகையில் கழிவகற்றலை மேற்கொள்ளல்
- நாட்டின் சமூக கலாச்சாரங்களை மேற்கொள்ளல்
- சமூக கலாச்சாரத்திற்கு பொருத்தமற்றதாக ஆடைகளை வடிவமைப்புச் செய்தல் (2 புள்ளிகள்)

iv) அ) வணிகங்கள் நம்முடன் கருமமாற்றகின்ற சகலரினதும் நன்மைகளை கருத்தில் கொண்டு செயலாற்றல். (2 புள்ளிகள்)

ஆ) வணிகம், வாடிக்கையாளர், ஊழியர், போட்டியாளர் சமூக கலாச்சாரம், நிறுவன கலாச்சாரம் (2 புள்ளிகள்)

v) முக்கியத்துவம் பெறுகின்ற 2 முறைகளைக் குறிப்பிடல் (2 புள்ளிகள்)

04. (1) அ) பூரண வேலைவாய்ப்பு, நிலையான விலைமட்டம் வேகமான விருத்தி, நிலைபேறான அபிவிருத்தி, சென்மதி நிலுவையின் சமமான தன்மை (6க்கு 2 புள்ளிகள், 4 -3 க்கு 1 புள்ளி)

ஆ) நேர், நேரில் (01 புள்ளி)

(ii) அ) அரசானது ஒரு சில வணிகக்கருமங்களின் போது தனியாருடன் போட்டியிட்டுச் செயற்படும்.

உதாரணம் கல்வி, போக்குவரத்து சுகாதாரம், தபால், தொலைபேசி போன்றவை.

மேற்பார்வையாளராக : அரசானது வணிகக்கருமங்களை நிர்வகித்து மேற்பார்வை செய்யும் செயற்பாட்டில் ஈடுபடுகிறது. அரச நிறுவனங்களை நிறுவி வணிகங்கள் நெறிப்படுத்தப்படுகின்றன.

உதாரணம் : போக்குவரத்து ஆணைக்குழு, பாவனையாளர் கருமங்கள் தொடர்பிலான அதிகாரசபை (இரண்டையும் விளக்க 2 புள்ளிகள்)

ஆ) இரண்டு கொள்கைகளையும் விளக்குவதற்கு (2 புள்ளிகள்)

iii) வட்டிவீதம், ஒதுக்கத் தேவைகளை மாற்றுதல், பல்வேறு வியாபாரக் கருமங்கள், கழிவு வீதத்தை மாற்றுதல், கடன்களுக்கு வரையறை விதித்தல் (4 க்கு 2 புள்ளிகள், இரண்டை விளக்குவதற்கு 2 புள்ளிகள்)

iv) அ) நிதி, வசதிகளை வழங்கல், சர்வதேச கடன் முன்மொழிவுத் திட்டம், நுட்ப அறிவும் மற்றும் தொழில் னுட்ப அறிவினைப் பெற்றுக் கொடுத்தலும், முகாமைத்துவ ஆலோசனை சேவைகள் ஊழியர்களக்கு பயிற்சியாளர்க்கும் வசதிகளை பெற்றுக் கொடுத்தல், வரிவிலக்கு, வரிச்சலுகை, சந்தை வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல். (3க்கு 1 புள்ளி 6க்கு 2 புள்ளிகள்)

ஆ) **நிதிவசதிகள்** :- தேசிய அபிவிருத்தி வங்கி, அரச ஈட்டு முதலீட்டு வங்கி, பிரதேச கிராமிய வங்கி, முகாமைத்துவ வசதிகள், இலங்கை வணிக விருத்தி மையம் தேசிய வணிக முகாமைத்துவ நிறுவனம்.

**தொழில் நுட்ப மற்றும் ஆலோசனை சேவைகள்** : - இலங்கைத் தரக் கட்டளைகள் பணியகம் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, கைத்தொழில் அபிவிருத்திச் சபை, கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம்.
**தொழில்களுக்கான நியமங்களை உருவாக்கல்** : - தேசிய தொழில்பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி நிறுவனம். (2 புள்ளிகள்)

v) ஆம் அரசு தனது நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக உட்கட்டமைப்பு வசதிகள், வரிவிலக்கு, வியாபார வசதிகள் போன்றவற்றை வணிகங்களுக்கு வழங்கிவருவதுடன், வணிகங்கள் அரசின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக வேலை வாய்ப்பு சிறந்த வள பயன்பாடு, சமூகத்திற்க உதவும் சேவைகள், கழிவகற்றல் முகாமைத்துவம் என்பவற்றை வழங்கி வருகின்றது. (மேற்குறிப்பிட்டவாறு ஒப்பீட:டு எழுதியிருந்தால் புள்ளிவழங்கவும்)

05. i) அ) 1. வியாபார முறைகேடுகள் கூடுதலாக இடம்பெறல்
2. ஒரு விருப்பத்திற்காக சந்தையில் பல்வேறு பொருட்கள் காணப்படல்
3. நுகர்வோர் அறிவு போதுமானதாகக் காணப்படாமை.
4. பூகோள மயமாக்கல் காரணமாக சந்தையில் பல்வேறு வகையான பொருட்கள் பல்வேறு தரங்களில் காணப்படல். (2 புள்ளிகள்)

ஆ) இரண்டு தலைப்புக்களையும் விளக்குவதற்கு (2 புள்ளிகள்)

ii) அ) நுகர்வோர் பொறுப்புடன் செயற்படும் போது நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ள முடியும். (இம்முறையில் விளக்கியுள்ள விடைக்கு 2 புள்ளிகள்)

ஆ) பொருத்தமான பொறுப்புக்களுக்கு (2 புள்ளிகள்)

iii) அ) சுயாதீனமாக, SLS சான்றுப்படுத்திய குறியீட்டு முறை மூலம், பூரணமாக ஏற்றுமதிப்பரிசோதனை மூலம், இறக்குமதிப் பரிசோதனை மூலம், ஏற்றுமதிக்காகத் தயாரிக்கப்படுகின்ற கடல் உணவுப்பரிசோதனையின் மூலம் (2 புள்ளிகள்)

ஆ) பொருத்தமான விளக்கத்திற்கு (2 புள்ளிகள்)

iv) அ) பூரணமான இகுக்குமதிப் பரிசோதனை மூலம்.
சில பொருட்களை இலங்கைச் சுங்கத்திடமிருந்து விடுவிக்க முன்னர் தர நிறுவனம் பரிசோதனை செய்து தரச்சான்றிதழை வழங்கல்.
பூரணமான ஏற்றுமதிச் சோதனை மூலம்
சில பொருட்களை ஏற்றுமதி செய்ய முன்னர் உரியதரத்தில் காணப்படுகின்றதா என்பதனை சோதனை செய்து தயார்படுத்தல் மர முந்திரிப்பருப்பு, கடல் உணவு என்பவை.

ஆ) நடைமுறைகளை ஒழுங்கு முறயைாகக் குறிப்பிட்டிருந்தால் புள்ளி வழங்கவும். (6க்கு 2 புள்ளிகள் 4,5 – 01 புள்ளி) (2 புள்ளிகள்)

v) அ) 1. செலுத்தும் பணத்திற்கு உரிய பெறுமதியுள்ள பொருளைக் கொள்வனவு செய்தல்.
2. வியாபார முறைகேடுகள், நுகர்வோர் பாதுகாப்பு மீறப்படும் போது அது தொடர்பில் உரிய அதிகாரிக்கு அறிவித்தல்.
3. வாழும் சூழலை பாதுகாத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.
4. சமூகம் தொடர்பில் ஒத்துழைப்புடனும் கவனமாகவும் செயற்படல். (2 புள்ளிகள்)

ஆ)

| நுகர்வோருக்கு | வணிகருக்கு |
|---|---|
| 1. வியாபார முறைகேடுகளிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு<br>2. நுகர்வோர் கல்வியறிவு மேம்படல்<br>3. தரமான பொருட்களை நியாயமான விலையில் பெற்றுக்கொள்வதற்கு | 1. தரமான பொருனை நியாயமான விலைக்கு வழற்குவதன் மூலம் நுகர்வோனின், நம்பிக்கையை பெறமுடிதல்.<br>2. தரத்திற்கேற்ப உற்பத்தி செய்வதனால் கிடைக்கும் நன்மைகள்<br>3. நுகர்வோனின் நம்பிக்கை அதிகரிப்பினால் ஏற்படும் அனுகூலங்கள். |

½ x 1 = 1 புள்ளி



LOL.lk
BookStore
විභාග ඉලක්ක
පහසුවෙන් ජයගන්න
ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න
| කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් | සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර
| A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත්
| School Book | ගුරු අත්පොත්
pesuru Prakashana Private Ltd.
Akura Pilot
සමනල දැනුම
T
සතර
පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට
www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න